# பேதுருவின் ஏக்கமும் ஊக்கமும்

*டாக்டர். திருமதி லில்லியன் ஸ்டான்லி*

**ஆ**ண்டவரை மறுதலித்தப் பிறகு பேதுரு வெளியே சென்று மிகவும் மனங்கசந்து அழுதார். அதற்குப் பிறகு நாம் அவரைக் குறித்து வாசிப்பது இயேசுவின் உயிர்த்தெழுதலுக்குப் பிறகு மகதலேனா மரியாள் ஓடிச் சென்று காலி கல்லறையைக் குறித்து அறிவித்ததுதான். இடைப்பட்ட நாட்களில் நடந்ததென்ன? கற்பனை யைப் பறக்கவிடுகிறேன்.

இயேசு சிலுவையில் அறையப்பட அழைத்துச் செல்லப்படுகிறார். பேதுருவுக்கோ அவமானம், பயம், பதற்றம். வீட்டிற்குச் சென்று (தற்காலிகமாக எருசலேமில் வாடகைக்கு எடுக்கப்பட்ட வீடாயிருக்கலாம்), கட்டிலில் விழுந்து கதறி அழுகிறார். வெளியே சென்றால் இவன் இயேசுவோடு இருந்தவன் என்று யாராவது அடையாளம் கண்டு கைது செய்யப்பட்டால்? காலை 9 மணியளவில் பேதுரு நினைக்கிறார், “என் குருவை இப்போது சிலுவையில் அறைந்து கொண்டிருப்பார்களோ?” திரள்கூட்டத்தின் கடையோரத்தில் நின்று குருவின் துடிதுடிப்பைப் பார்த்துக் கொண்டிருந்தாரோ? (லூக் 23:27). அந்திசாயும் நேரத்தில் யோவானும் பெண்களும் வந்து நடந்ததை விவரிக்கின்றனர். மறுபடியும் பேதுரு அழுகிறார். அடுத்த நாளும் அதற்கடுத்த நாளும் ஆமை வேகத்தில் நகர, தன் கோழைத்தனத்தை நினைத்து பேதுரு புழுங்குகிறார். இதை, இதை, இதைச் செய் தேனில்லையே என ஏங்குகிறார். கடிகாரத்தின் கைகளைப் பின்னால் திருப்ப முடியுமோ? கட்டிலில் இருந்து எழுந்து உட்காருகிறார், சோர்வோடு போராடுகிறார். தனது துக்கத்திலும் அவமானத்திலும் உடைந்துபோவ தில்லை, எழுந்து முன்னேறுவேன் எனத் தீர்மானிக்கிறார். சிந்தின பாலைச் சேர்க்கமுடியாது. கவலைப் பட்டுப் பயனில்லை. எல்லாம் போய்விடவில்லை. இப்போது நான் என்ன செய்யலாம்? என்று நினைக்கிறார்.

நம் எல்லாருக்குமே செய்தத் தவறுகளை நினைத்து கவலைகள் உண்டுதான். ஆனால் உற்சாகம் கொள்ளுங்கள். கடந்த காலத்தைப் பழுதுபார்க்க யுக்திகள் உண்டு. கீழே பேதுருவின் ஏக்கங்களையும் ஊக்கங்களையும் காணலாம்:

| | |
|---|---|
| 1. கெத்செமனேயில் தூங்காமல் விழிப்புடன் ஜெபித்து இயேசுவைத் தாங்கினேனில்லையே என ஏங்குகிறேன். | 1. உலகிற்காய்த் தன் உயிரைக் கொடுத்த என் ஆண்டவரை நினைத்து, தொலைந்துபோனோ ருக்காக விழிப்புடன் விண்ணப்பிக்க ஊக்கங் கொள்கிறேன். |
| 2. இயேசு கைது செய்யப்பட்டபோது அங்கிருந்து ஓடாமலிருந்திருக்கலாமே என ஏங்குகிறேன். | 2. துன்பப்படுவோரைத் தாங்கிப் பிடிக்க ஊக்கங் கொள்கிறேன். |
| 3. என் ஆண்டவரை மறுதலிக்காமல் அவரோடு நின்றிருக்கலாமே என ஏங்குகிறேன். | 3. நான் யாரென்று மறைத்துக்கொள்ளாமல் கிறிஸ்தவனென்று நிமிர்ந்து நிற்க ஊக்கங் கொள்கிறேன். |
| 4. அன்னா, காய்பா, ஏரோது, பிலாத்துவுக்கு முன் பாக இயேசுவின் களங்கமின்மையை பறைசாற் றாமல் போனேனே என ஏங்குகிறேன். | 4. அநியாயமாய் தண்டிக்கப்படுகிறவர்களுக் காக குரலெழுப்பி அவர்களைக் கொடூரக் கரங் களிலிருந்து விடுவிக்க ஊக்கங்கொள்கிறேன். |

| | |
|---|---|
| 5. அவரது சிலுவையைக் கொல்கொதாவிற்குச் சுமந்து சென்று அவருக்குப் பளுவைச் சற்றுக் குறைத்திருக்கலாமே என ஏங்குகிறேன். | 5. ஆண்டவர் எனக்குக் கொடுத்த சிலுவையை மகிழ்ச்சியோடு சுமந்து சென்று அவரை மகிழ்விப் பேன் என ஊக்கங்கொள்கிறேன். |
| 6. சிலுவையின் அருகில் நின்று அவரது வேத னையை கவனித்திருப்பேனானால் சிலுவை மர ணத்தின் கொடூரத்தைப் புரிந்துகொண்டிருப் பேனே என ஏங்குகிறேன். | 6. பல வேலைகளின் மத்தியிலும் நோயுற்றோர், துன்புறுவோர், கண்ணீர் வடிப்போரைச் சந்தித்து ஆறுதல்படுத்த ஊக்கங்கொள்கிறேன். |
| 7. அவரது தாகத்தைத் தணிக்க தண்ணீர் கொடுத் தேனில்லையே என ஏங்குகிறேன். | 7. பசியுடனும் தாகத்துடனும் என் வீட்டு வாசற் படிக்கு வருவோரைத் துரத்திவிடாமல் கனிவுடன் அவர் கள் தேவையைச் சந்திக்க ஊக்கங்கொள்கிறேன். |
| 8. “முடிந்தது” என்ற அவரது கதறலைக் கேட்டிருந் தால் சவால் பெற்றிருப்பேனே என ஏங்குகிறேன். | 8. என் வாழ்க்கைக்கான இறைச் சித்தத்தை அறிந்து முழுமூச்சோடு அதை நிறைவேற்ற முற் பட்டு ஓட்டத்தை முடிக்க ஊக்கங்கொள்கிறேன். |
| 9. தைரியமாக பிலாத்துவிடம் சென்று இயேசு வின் உடலை எடுத்துக்கொள்ள அனுமதி கேட்டே னில்லையே என ஏங்குகிறேன். | 9. என்னைச் செயலிழக்கச் செய்யும் பயத்தை மேற் கொண்டு தைரியமாக ஆண்டவர் செய்யச் சொல் வதைச் செய்ய ஊக்கங்கொள்கிறேன். |
| 10. இயேசுவின் உடலுக்கான வாசனைப் பொருட் களுக்காக என் பணத்தைச் செலவழித்தேனில் லையே என ஏங்குகிறேன். | 10. என் செலவைக் குறைத்து ஆண்டவருக்காக வும் இறையரசின் விரிவாக்கத்திற்காகவும் அதிகம் செலவழிக்க ஊக்கங்கொள்கிறேன். |
| 11. இயேசுவின் உடலை அணைத்து, இறக்கி, கல் லறைக்குக் கொண்டுபோய் வைத்து, பெரிய கல்லைப் புரட்டிவைத்து வந்தேனில்லையே என ஏங்குகிறேன். | 11. கடினமான, யாரும் விரும்பாத வேலைகளை ஆண்டவருக்காக முறுமுறுக்காமல் தயக்கமின்றி செய்ய ஊக்கங்கொள்கிறேன். |
| 12. இயேசு தான் மூன்றாம் நாளில் உயிர்த்தெழுவ தாகச் சொன்ன வார்த்தையை நினைவில் வைத் தேனில்லையே என ஏங்குகிறேன். | 12. வேத வசனங்களை மனனம் செய்து, நினை வில் வைத்து அவற்றின்படி நடக்க ஊக்கங் கொள்கிறேன். |
| 13. உயிர்த்தெழுந்த ஆண்டவரை முதலாவது தரிசித்து பிறருக்குப் போய்ச்சொல்லக் கட்டளைப் பெற்றேனில்லையே என ஏங்குகிறேன். | 13. ஒவ்வொரு நாளும் அதிகாலமே எழுந்திருந்து இறைப் பிரசன்னத்தில் திளைத்து அந்த நாளில் சந்திக்கும் ஒவ்வொருவருக்கும் சாட்சி பகர ஊக் கங்கொள்கிறேன். |

“ஒன்று செய்கிறேன், பின்னானவைகளை மறந்து, முன்னானவைகளை நாடி, கிறிஸ்து இயேசுவுக் குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப் பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடருகிறேன்” (பிலி 3:13,14).ஏங்குகிறேன்.

(www.lilianstanley.com), 98435 11943.